முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்சோழ நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.03.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. மனமதை அடக்கி மனிதரெல்லாம்
   மகான்கள் ஆகும் மார்க்கமதை
   ஞானமாக அருளும் அரங்கனே
   ஞானியே நின்பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சேல் திங்கள்
   குறைவிலா பஞ்சதிகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 05 ம் நாள், 19.03.2023, ஞாயிற்றுக்கிழமை)
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   தேசிகனுக்கு புகழ்சோழ நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயிர்கொலை நீக்கி வாழும்
   ஞானமாம் சைவநெறி மார்க்கம்
   நம்பிக்கை வைத்து மக்கள் வர
4. வருவதுடன் வள்ளலாக அருளும்
   வாழும் ஞானி அரங்கமகானிடம்
   குருவருள் பெறும் உயர் தீட்சை
   குருவே என பணிந்து ஏற்று
5. ஏற்பதுடன் அனுதினமும் பூசை
   இடைவிடா ஞானிகள் மேல் செய்து
   அற்புதம்பட சக்தி பெருக்கிட
   அவரவர்க்கும் ஞானிகள் ஆசி
6. ஆசிபலம் கிட்டி நல்சிந்தை பெருகும்
   ஆனாலும் கருமவினை தொடரவிடா
   ஆசிபலம்தனை குறைக்கும்படியே
   ஆசாபாச மாயைவழி செல்லும்
7. செல்லுகின்ற வினைகளை அகற்ற
   சிறப்பான அரங்கன் தரும
   வல்லமை அறிந்து ஏற்று
   வணங்கி அன்னதான சேவை
8. சேவை வழி பெருமைபட உதவி
   சேவகராகவும் மாறித் தொண்டு
   அவனியில் செய்து வந்திட
   அவரவர் கருமவினை அகன்று
9. அகன்று பூரணத் தெளிவு திடம்
   அடங்கியே பொறிபுலன் வழி
   வகைபடா செல்லும் நிலையிலா
   வாசிவசமாக சர்வ யோகமும்

10. யோகமும் குருவருள் துணைபட
உயர்வாக சித்தி கண்டுமே
செகத்தினில் அரங்கன் வழிகாட்டலில்
சித்தர்களாய் ஞான பலமிக்கவர்களாக

11. ஆகவே மக்களெல்லாம் தேறி
அகிலம் தனை மாற்றி இனிதே
மிகையான ஞான ஆட்சிபடைப்பர்
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–